
www.tamilarangam.net

T.E.I.B.

# செய்திக்கோவை

நடுவம் 16

தை சிறப்பிதழ் 1986





**புரட்சி வெல்வோம்! உயர்ச்சி கொள்வோம்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாள வர்க்கத்திற்கான வேலைத் திட்டங்களுடன் கூடிய புரட்சிகர இயக்கமாகிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தனது ஒருங்கிணைந்த ஆதரவை ஏகாதிபத்தியத்திற்கும், சியோனிசத்திற்கும் எதிராக போராட்டம் நடாத்தும் பாலஸ்தீன மக்களுக்கு தெரிவித்து அண்மையில் விடுத்துள்ள அறிக்கை.




இன்று ஏகாதிபத்தியம் மற்றும் சியோனிச அச்சுறுத்தல்களினால் மூன்றுவது மண்டல நாடுகளின் மக்களும் விடுதலை இயக்கங்களும் இக் கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இவ் அடக்கு முறையாளர்கள் ஆயுத பலத்தினால் விடுதலையை நாடி நிற்கும் மக்களை அடக்கி விடலாம் என நம்புகின்றனர்.

லெபனானில் உள்ள சப்ரா, சட்டில்லா படு கொலைகள் மூலமும், அவ்வாறே ஸ்ரீலங்கா திருகோணமலை, மன்னார், வவுனியா, யாழ் நகர் போன்ற இடங்களில் நடந்த படு கொலைகள் மூலமும் விடுதலைப் போராட்டத்தை நசுக்கலாம் என்ற தவறான கண்ணோட்டத்தை கொண்டிருந்தனர்.

ஆயினும் உண்மையாகவே இந்நடவடிக்கையானது அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற நம்பிக்கையையே மக்களுக்கு மென்மேலும் வலுவூட்டி வருகின்றது. இவர்களின் ஒடுக்குமுறையானது பொது எதிரியான ஏகாதிபத்தியம் மற்றும் யூத இனவாதத்துக்கு எதிரானதாக அடக்கப்பட்ட மக்களை ஒன்று திரட்டுகிறது.

1949 இல் இருந்து பாலஸ்தீன மக்களுக்கு எதிரான யூத இனவாதிகளின் மிருகத்தனமானதும், கீழ் தரமானதுமான தாக்குதல்களின் மூலம் அந்த மக்களை அடக்கி விட முடியாமல் போனதற்கான காரணம் பாலஸ்தீன மக்களின் விடுதலை வேட்கை அதிகரித்து நின்றமையேயாகும்.

இஸ்ரேலின் மொசாட், பிரிட்டனின் எஸ். ஏ. எஸ், தென்னாபிரிக்க இனவெறி அரசு, பாகிஸ்தான் சர்வாதிகார அரசு போன்றவற்றின் ஆதரவுடன் பொம்மை ஆட்சி நடாத்தும் இனவாத அரசிற்கெதிரான தேசிய விடுதலைப்போராட்டம் நடாத்தும் தமிழீழ மக்களின் சார்பில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் ஏகாதிபத்தியத்திற்கும், அதன் சியோனிசவாதத்திற்கும் எதிராக போராடும் பாலஸ்தீன மக்களுக்கு தனது ஒருங்கிணைந்த ஆதரவை தெரிவித்து கொள்கிறது.

1948 ஆம் ஆண்டு ஜனவரியில் சியோனிச வாதிகள் ஜப்பாவில் 22 பாலஸ்தீனர்களை படுகொலை செய்தனர். மறுதினம் சிமிராமிஸ் கொட்டலை வெடிவைத்து தகர்த்து மேலும் 22 பாலஸ்தீனர்களை படுகொலை செய்தனர். மேலும் ஜனவரி பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இத்தகைய பயங்கரவாதம் சிறிய அளவில் நடந்தன,



ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி ஜெருசலத்திற்கு அண்மையிலுள்ள டியர்யாசின் என்னும் இடத்தில் பெண்கள் குழந்தைகள் உட்பட 254 பாலஸ்தீனர்களை படுகொலை செய்தமை மிக மோசமான நிலைமையை எடுத்துக் காட்டுகிறது.

1948 மே மாதம் அளவில் நான்கு இலட்சம் பாலஸ்தீனியர்கள் அகதிகளாக்கப்பட்டனர். இதனைப் போன்றே 1948 இல் இனவாத ஸ்ரீலங்கா அரசினால் வாக்குரிமை பறிக்கப்பட்டு ஏறத்தாள பத்து இலட்சம் மலையகத்ததமிழ் மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர். 1958 இல் அரச ஒத்துழைப்பில் நடந்த இனப்படு கொலைகளின் போது நூற்றுக்கும் அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டதுடன் ஆயிரக்கணக்கில் அகதிகளாக்கப்பட்டனர்.

இத்தருணத்தில் நாங்கள் தனிமைப்படுத்தப்பட்டோம். ஆயினும் ஏகாதிபத்தியத்தின் கரங்கள் இனவாதத்தையும் யூத இனவாதத்தையும் பயன்படுத்தி தனது நலன்களை பாதுகாக்கும் செயலை நாம் உணரவில்லை. ஆயினும் எமது பிரதேசங்களில் நடக்கும் ஒடுக்குமுறைக்கான போராட்டம் தீவிரமடைந்த நிலையில் ஏகாதிபத்தியமே எமது பொது எதிரியென அறிந்து கொண்டோம்.

தோழர்களே நாங்கள் பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவில் வாழ்ந்தாலும் மொழியால் வேறுபட்டாலும், நாங்கள் ஆசிய ஆபிரிக்க மத்திய கிழக்கு மற்றும் இலத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்ந்தாலும் எமது பொது எதிரியும் எமது நோக்கமும் ஒன்றே. ஏகாதிபத்தியமே எமது பொது எதிரியாகும். அடிமைத்தனத்தில் இருந்து எமது மக்களை காப்பதே எமது தலையாய நோக்கமாகும்.

ஏகாதிபத்தியமும், இனவாதமும் அதன் கிளைகளான யூத இனவாதம், நிறவெறி போன்றவற்றுக்கும் எதிராக போராடும் நாம் இத்தருணத்தில் ஒரு பொது எதிரியை தோற்கடிப்பதற்காக சர்வதேச ரீதியில் ஒரு பொதுஐக்கியமை ஏற்படுத்த வேண்டும்.

இறுதியாக தமிழீழ மக்கள் சார்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தனது ஒருங்கிணைந்த நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாலஸ்தீன விடுதலை முன்னணியின் வழிகாட்டலின் கீழ் வழிமுறையின் கீழ் பாலஸ்தீன மக்கள் மேலும் வலுவடைவதுடன் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கிளையான இஸ்ரவேல் அரசினதும் பின்னடைவு முயற்சிகளை முறியடித்து வெற்றியடைவார்கள் என்பதே எமது நம்பிக்கையுமாகும்.

★

வாழ்க சர்வதேசியம்!
வாழ்க மார்க்சிய லெனினிசம்!
வாழ்க பாலஸ்தீன விடுதலை முன்னணி!
வெல்க தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்!

''பாட்டாளி வர்க்கத்தின் அயல்த்துறைக் கொள்கையானது எல்லா ஏகாதிபத்திய வாதிகளுக்கும் எதிராக முன்னேற்றமடைந்த நாடுகளின் புரட்சியாளர்களுடனும், கூட்டணி வகுத்துக் கொள்வதாகும்''

—லெனின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் தமிழீழத்தின் குரல் வானொலியில் ஆற்றிய 'தமிழீழப் போராட்டமும் முஸ்லீம் மக்களும்' பற்றிய உரையின் ஒரு பகுதி

# "விடுதலை என்பது தனியான ஓர் இனத்திற்கு மட்டுமல்ல"

தமிழீழத்திலுள்ள முஸ்லீம் சமுதாயத்தின் எண்ணிக்கையானது இலங்கையிலுள்ள தமிழ் சமுதாயத்தின் எண்ணிக்கையை ஒத்ததாகும். தமிழீழம் சுதந்திரம் அடையும் தருணத்தில் இன்று சிங்கள அரசியல் வாதிகளினால் சிறுபான்மையினர் அடக்கி ஒடுக்கப்படுவதைப் போல தாமும் தமிழர்களால் அடக்கி ஒடுக்கப்படுவோம் என்ற பயமும் சந்தேகமும் ஐயப்பாடும் முஸ்லீம் மக்களிடையே இன்று காணப்படுகிறது, அத்துடன் தமிழர்கள் இன்று சிங்களவர்களினால் கொடுமைப்படுத்தப் படுவதைப்போல தாமும் தமிழர்களினால் தமிழீழத்தில் கொடுமைப்படுத்தப் படுவோம் எனவும், இன்றைய நிலைமையைப் போல் தமிழீழத்தில் தமது உரிமைகளுக்காக வாதாட முடியாது எனவும் பயம் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் முஸ்லீம் மக்களுடைய உண்மையான நியாயமான பிரச்சினைகளை அனுதாபக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டியது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மட்டுமல்லாது தமிழர்களாகிய எல்லோருடைய கடமையுமாகும், அத்துடன் முஸ் மக்களின் பயத்தையும், சந்தேகங்களையும், ஐயப்பாடுகளையும் அகற்ற வேண்டியது எமது கடமைகளில் ஒன்றாகும். மேலும் தமிழ் பூர்ஷ்வா அரசியல் வாதிகள் தேர்தல் வேளைகளில் பல வாக்குறுதிகளை அளித்து தேர்தல் வெற்றி பெற்றதும் அவ் வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு முஸ்லீம் மக்களை ஏமாற்றி வந்ததினாலும் எம்மை முஸ்லீம் மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதற்கு நாம் இடம் அளித்துள்ளோம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் முஸ்லீம் சமூகத்தின் பிரச்சினைகளை சரியான முறையில் அணுகி அவர்களை வென்றெடுக்க வேண்டும். அவர்களை எமக்கு எதிரிகளாக்கக்கூடிய எந்த செயற்பாடுகளையும் செய்யாமல் எமது நிலையை நன்கு விளக்கி முதலாளித்துவ சக்திகள் தமது வர்க்க நிலையை பேணுவதற்காக எப்படி எம்மை பிளவு படுத்தக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்பதனையும் எடுத்து கூறவேண்டியது எமது முக்கிய கடமையாகும்.

இதை நாம் செய்ய தவறினால் இன்று ஸ்ரீலங்காவிலுள்ள தமிழர்களின் நிலையைப் போல நாளை தமிழீழத்தில் முஸ்லீம்களின் நிலை உருவாகும். கடந்த ஆண்டு வைகாசி மாதம் இவ்விரு சமூகத்தினரிடையேயும் ஏற்பட்ட கலவரங்களில் சில விடுதலை இயக்கங்கள் நடந்து கொண்ட முறை எமது போராட்டத்திற்கு எந்த விதமான நம்பிக்கையையும் ஏற்படுத்தவில்லை, மாறாக இவர்களது முட்டாள்தனமான தவறுகளினாலும் வழிகாட்டல்களினாலும் செயற்பட்ட பழி வாங்கல் நடவடிக்கைகளினாலும் முஸ்லீம் மக்களுக்கு விடுதலை இயக்கங்கள் மேல் இருந்த அவ நம்பிக்கையையும் சந்தேகத்தையும் வலுப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் தமிழ்.. முஸ்லீம்களின் மோதலையும், ஸ்ரீலங்கா அரசின் பொய்ப்பிரசாரத்தையும் வலுப்படுத்தவும் கொழும்பை மையமாக கொண்ட முஸ்லீம்களின் முதலாளித்துவ தலைமைகளை நியாயப் படுத்தவும் பலமடையச் செய்யவுமே அமைந்தது.



இன்று முஸ்லீம் மக்களிடையேயும், தமிழர்களிடையேயும் உறவுகள் சீர்குலைக்கப்பட்டுள்ளன. இதற்கு குறிப்பிட்ட ஒரு விடுதலை இயக்கமும் காரணமாக அமைகிறது. முதலாளித்துவமானது தவறான வழிகாட்டலுக்கு உட்பட்ட சக்திகளை பயன்படுத்தி

எம்மை பிளவு படுத்தி தமது வர்க்க நலன்களையும் தலைமைத்துவத்தையும் காப்பாற்றுவதற்காக எமது மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்க முயல்கிறது.

எனவே தமிழர்களும் முஸ்லீம்களும் இச்சக்திகளை அடையாளம் கண்டு நிராகரிக்குமாறும், முதலாளித்துவ சக்திகளின் பிடிக்குள் சிக்கிவிட வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறோம். இப்பேர்ப்பட்ட வழிகளில்தான் இத்தவறான வழிகாட்டல்களுக்கு உட்பட்ட சக்திகளின் செயல்பாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும்.

இன்று இப்படியான சில விடுதலை இயக்கங்கள் தமது இறைமையை முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளிடம் அடகு வைத்துள்ளனர். இம்முதலாளித்துவ சக்திகள் தமது நலன்களை பாதிக்கும் வகையில் உருவாகிவரும் நிலைமைகளை தடுப்பதற்கு இந்த தவறான வழிகாட்டல்களுக்கு உட்பட்ட சக்திகளை பயன்படுத்தி வருகின்றனர்.

நாம் மக்களுக்கு கூறிக்கொள்வதாவது மதப்பிரிவினைகளை முட்டாள்தனமாக விடுதலைப் போராட்டத்தில் முன்வைப்பவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். எங்களுடைய போராட்டமானது ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகும், இது ஒரு சமூகத்தை பிரிவுபடுத்தும் போராட்டமல்ல. எங்களது போராட்டமானது எங்களையும் எங்களது சகோதரர்களையும் பாஸிஸ இனவாத ஸ்ரீலங்கா அரசிடமிருந்தும் அடக்குமுறைகளிலிருந்தும் விடுவிப்பதற்கேயாகும்.

முஸ்லீம் சமூகமானது தமிழீழத்தில் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாகும். அவர்கள் தனித்துவத்தை கொண்டுள்ளார்கள் அத்துடன் விசேட பிரச்சினைகளையும் கொண்டுள்ளார்கள். அவர்களை புரிந்து கொள்வது எங்களது கடமையாகும். அவர்கள் ஸ்ரீலங்கா பாஸிஸ அரசுடன் இணைவதினால் அவர்கள் எந்தவித உரிமைகளையோ நன்மைகளையோ அடையமுடியாது என்பதனை நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். முதலாளித்துவ அரசின் நோக்கம் மக்களை அழிப்பதே. அவர்களெதிரே முஸ்லீம்கள், சிங்களவர்கள் அல்லது தமிழர் என்ற தனியான அக்கறை காண்பிக்க மாட்டார்கள். இதனை நடைமுறைப்படுத்த அவர்கள் இம் மூன்று இனங்களுக்குமிடையே பிரிவினையை ஏற்படுத்துகின்றார்கள். தெற்கில் முதலாளித்துவ வாதிகள் உழைக்கும் வர்க்கத்தினரிடையே இனவாதத்தைத் தூண்டுகின்றனர். இதனால் உழைக்கும் வர்க்கத்தினர் தெற்கில் பலவீனமாக உள்ளனர். இவர்கள்பலமில்லாமல் இருப்பதனால் அரசு அவர்களை அடக்க முடிகிறது இன்று தெற்கில் உள்ள உழைக்கும் வர்க்கமானது தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளது இதே விதமாகவே முஸ்லீம் மக்களையும் அரசு தனது வலைக்குள் சிக்க வைத்து அவர்களையும் பலமற்றவர்களாக்க முனைகிறது நாம் முஸ்லீம் உழைக்கும் வர்க்கத்திற்கும் மக்களுக்கும் விவசாயிகள் மற்றும் மீன் பிடித் தொழிலாளர்களுக்கும் கூறிக் கொள்வது, முதலாளித்துவ வாதிகளின் இந்த தந்திரங்களை நிராகரியுங்கள். முதலாளித்துவ வாதிகள் உங்களைப்பயன் படுத்தி தாம் இன்னும் சுக போகிகளாக வாழ்வதற்கும் ஏகபோக அதிகாரத்தை நிலை நாட்டுவதற்குமேயாகும்.

– வளர்க இந்த கிறீஸ்தவ இஸ்லாமிய ஒற்றுமை. வாழ்க தமிழீழம் –

இலட்சியங்கள் எப்போதும் மக்களின் தினசரி வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு வர்க்கத்தின் சாதாரண பிரச்சனையோடு இணைந்திராத எந்த ஒரு மிக உயர்ந்த குறிக்கோளும் செப்புக்காசின் மதிப்பைக்கூட பெறுவதில்லை.

—லெனின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழச்

21.12.85

*காலை மானிப்பாய் கந்தரோடை பகுதியில் விமானப்படையினரின் ஹெலிகொப்டர் ஒன்று போராளிகளால் தாக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் மேலும் பல ஹெலிகொப்டர்களில் வந்த பாதுகாப்பு படையினர் மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர். இரு நாட்கள் தொடர்ந்த இத் தாக்குதல்களில் அரச படையினர் பீரங்கிகளையும் பாவித்துள்ளனர்.

*மடுகோவில் அருகில் நீர்கொழும்பைச் சேர்ந்த ஏழு யாத்திரிகர்கள் இனம் தெரியாத கோஷ்டி ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

*யாழ் மாவட்டத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட சுவீஸ் அரசின் உயர் மட்ட குழுவினரை யாழ் பிரஜைகள் குழுவினர் சந்தித்து பேசியுள்ளனர்.

*

22.12.85

*கொழும்புத்துறையில் தரையிறங்கவந்த பல ஹெலிகொப்டர்களை தரையிறங்க விடாது அனைத்து விடுதலை இயக்கங்களும் ஒருமித்து நின்று தாக்கியதில் ஹெலிகொப்டர்கள் தரையிறங்காது பின்வாங்கியுள்ளன.

23.12.85

*காலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பேச்சாளர் தோழர் பாலசிங்கத்தின் வீட்டுக் குண்டுவெடிப்பை தொடர்ந்து இச்சம்பவத்தைக் கண்டித்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

24.12.85

*காலாகாலமாக மன்னம்பிட்டி பகுதியில் வசித்து வந்த தமிழர்களை மகாவலித் திட்டம் எனும் பேரில் மகாபொக்கன என்ற இடத்தில் குடியமர்த்தப் படுகின்றனர். இவர்கள் கட்டாயத்தின் பெயரில் பௌத்த கோவில்களை வணங்கச் செய்து இவர்கள் சிங்களவர்களே என்று கூறவைக்கப்பட்டு கைப்பொம்மைகளாக நடாத்தப்படுகின்றனர்.

* இம்முறை நடைபெற்ற பௌத்த பெரகரா விழாவில் பௌத்த கொடிகளை தமிழர்களை கொண்டு சுமக்க வைத்துள்ளதன் விழாவிற்கான உணவுப்பொருட்களை தமிழ் பெண்களை கொண்டே தயாரித்துள்ளன

25.12.85

* இலங்கையிலுள்ள 94,000 இந்தியா வம்சாவழித் தமிழர்களை விமானம் மூலம் இந்தியாவிற்கு அனுப்ப முடிவு செய்துள்ளது ஆனால் இலங்கையில் சகஜ நிலை ஏற்படும் வரையும் இந்தியாவிலுள்ள இலங்கை தமிழர்கள் அங்கு சென்று சுகமாகவும் கௌரவமாகவும் வாழக்கூடிய நிலை வரும் வரையும் இலங்கை அரசின் முடிவை நிறைவேற்ற தயாரில்லை என பிரதமர் ரஜீவ் காந்தி கூறியுள்ளார்.

29.12.85

*நிலாவெளி சாம்பல் தீவு இறைகண்டியில் பத்து தமிழர்களை ராணுவம் சுட்டு கொன்றுள்ளது. சிவநாதன், லோகநாதன் ஆகியோர் உயிருடன் எரியூட்டப் பட்டுள்ளதுடன், அப்பகுதியில் 149 பேர் கைது செய்யப்பட்டு முள்ளனர்.

31.12.85

* தமிழர்களுக் கெதிராக தொடர்ந்து நடாத்தப் படும் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

*29.12.85 அன்று 1000ற்கும் மேற்பட்ட இராணுவம் கிளிநொச்சியை முற்றுகையிட்டு அராஜகம் புரிந்துள்ளது.

01.01.86

* 1980ம் ஆண்டு ஒக்டோபரில் 7 வருட காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருமதி. ஸ்ரீமாவின் குடியுரிமை இன்று ஜெயவர்த்தனாவால் வழங்கப்பட்டது.

02.01.86

* கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரி இராணுவ பயிற்சிக்காக அரசால் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

05.01.86

* யாழ் கோட்டை இராணுவத்தினர் மீது போராளிகள் தாக்குதல் நடாத்தியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காயமடைந்து முள்ளனர். இதனைத் தொடர்ந்து இராணுவம் பீரங்கி, ஹெலி கொப்டர் சகிதம் தாக்கியதில் யாழ் பண்ணை பஸ் நிலையம் பகுதிகளில் 9 தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் 60ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அப்பகுதி இரத்த வெள்ளமாக காட்சியளித்தது.

* இராணுவத்தின் தாக்குதலின் போது போ.நி.க.குழு உறுப்பினர் திரு. சிவத்தம்பியும் காயமடைந்துள்ளார்.

08.01.86

*தள்ளாடி இராணுவமுகாமில் ஏற்பட்ட கொந்தளிப்பின் பின் 40ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வெளியேறினர். மேலும் வெளியேற முயற்சித்த பலர் தடுப்புக்காவலில் இடப்பட்டனர்.

10.01.86

போ.நி.க.குழு உறுப்பினர்களான, பேராசிரியர் சிவத்தம்பி, சிவபாலன், ஆகியோர் அக் குழுவில் இருந்து இராஜினாமாச் செய்தனர்.

* நீர் கொழும்பு சிறைச்சாலையில் இருந்து தப்பிய ஹென்றி பெரேரா என்பவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

12.01.86

* குச்சவெளிப்பகுதியில் இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் முஸ்லீம் பெண்களை துன்புறுத்தி வந்த செயல்களைக் கண்டித்தும், இராணுவமுகாமை அகற்றுமாறு கோரியும் 08.01.86 அன்று மாபெரும் ஊர்வல மொன்று நடாத்தப் பெற்றது.

14.01.86

* 1000ற்கும் மேற்பட்ட மலையக தோட்ட தொழிலாளர்கள் தங்களது பிரார்த்தனைக் கூட்டங்களை நடாத்தினர்.

...க் கூட்டங்களை இ.தொ.காங்கிரஸ் தொடர்ந்து நடாத்தாது கைவிடுமென ஸ்ரீலங்கா அரசுபின்பு அறிவித்தது.

16.01.86

* யாழ் கோட்டை இராணுவ முகாமைச் சூழ 1000 மீற்றர் தூரத்தை பாதுகாப்பு வலையமாக அரசு இன்று பிரகடனப்படுத்தியது. —

17.01.86

* காலியில்மேலுமொரு புதிய கடற்படைப் பயிற்சித்தளம் இன்று திறக்கப்பட்டது.

* யாழ் கோட்டைப் பகுதியில் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது அனைத்து விடுதலை அமைப்புகளும் ஒன்றிணைந்து தாக்குதல் நடாத்தியதில் இராணுவம் கோட்டைக்குள் பின்வாங்கியது.

15ம் 16ம் திகதிகளில் புலோலைக் கட்டுவன், குரும்பசிட்டி பகுதியில் இராணுவம், போராளிகளும் நேரில் எதிர்கொண்ட போது ஏற்பட்ட மோதலில் இராணுவம் பின்வாங்கச் செய்யப்பட்டது.

21.01.86

* லிபியா, அமெரிக்கா இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் தொடர்பான விடயத்தில் லிபியாவுற்கு ஆதரவாக இந்தியக் கம்யூனிசக் கட்சியினால் இன்று சென்னையில் நடாத்தப் பெற்ற மாபெரும் பேரணியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் உட்பட பல சர்வதேச முற்போக்கு இயக்கங்களும் கலந்து கொண்டுள்ளன.

22.01.86

* யாழ் குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலையங்களை நீக்கும் படியும் கோட்டை இராணுவ முகாமை அகற்றும் படியும் கோரி பரவலாக கடையடைப்புகளும், ஊர்வலங்களும் நடாத்தப் பட்டுள்ளதுடன், இன்று பொியளவிலான ஊர்வலம் ஒன்றும் யாழ் நகரில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

* முல்லைத்தீவில் பத்திரிகையாளர் என்ற போர்வையில் உளவு பார்த்ததாகக் கூறப்படும் பிரிட்டிஸ் பெண்மணி ஒருவரை விடுதலை இயக்க மொன்று தடுப்புக்காவலில் வைத்துள்ளது. இவரைவிடுதலை செய்யுமாறு கொழும்பில் உள்ள பிரிட்டிஸ் தூதராலயம் கேட்டுள்ளது. ஆனால் அப்பெண்மணியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப் போவதாக, போராளிகள் பின்பு அறிவித்துள்ளனர்.

23.01.86

* இலங்கையில் இந்திய வம்சாவழியினர்க்கு பிரஜாவுரிமை வழங்கியதற்கு கண்டனம் தெரிவித்து திருமதி ஸ்ரீமா மேலும் மலையக மக்களுக்கு எதிரான ஒரு யுத்தத்திற்கு சிங்கள மக்கள் தயாராக வேண்டும் எனவும் இனவாதத்தை முடுக்கியுள்ளார்.

*தெல்லிப்பளை, கட்டுவன், வசாவிளான் பகுதிகளில் இராணுவம் நடாத்திய அராஜகங்களினால் ஆசிரியர் வரதராஜப் பெருமாள் என்பவர் உட்பட 15 பொதுமக்களும், இரு இளைஞர்களும் கொல்லப்பட்டுள்ளதுடன் 25 பொதுமக்கள் கா காயமடைந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* தொடர்ந்து ஏற்பட்ட இராணுவ போராளிகள் மோதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 8 படையினர் காயமடைந்துள்ளனர். பொதுமக்களுக்குச் சொந்தமான 30 வீடுகள் சேதமாக்கப்பட்டன.

25.01.86

*நாட்டின் தென் பகுதியில் உள்ள மார்க்சிஸக் குழுக்களோடு தமிழ்ப் போராளிகள் பேச்சுக்களை மேற் கொண்டுள்ளதாக லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

* திருமதி.ஸ்ரீமாவிற்கு மீண்டும் சிவில் உரிமைகள் கொடுப்பது என்ற முடிவினை தானே எடுத்தாகவும், இவ்வாறு மேற் கொண்ட முடிவினை அடுத்து தனது அமைச்சரவையில் சில பிளவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் ஜயவர்த்தனா கூறியுள்ளார்.

* கொழும்பு செல்லும் புகையிரதத்திற்காக கிளிநொச்சியில் புகையிரத நிலையத்தில் காத்திருந்த பொது மக்கள் மீது இராணுவத்தினர், துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், 3 பெண்கள் உட்பட 11 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

27.01.86

*இலங்கையில் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண, இராணுவத்தைக் கொண்டு தமிழ் போராளிகளை ஒடுக்குவதே ஒரே வழி என்றும், இவ்வருட இறுதிக்குள், இராணுவம் தமிழ்ப் போராளிகளை ஒழித்துக் கட்டும் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாகவும் இனவாத அரச அதிபர் ஜயவர்த்தனா 'த ஜலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

29.01.86

* 14 தமிழ் எம்.பி.க்களையும் மீண்டும் பாராளுமன்றம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுத்து வருவதாக 'சண்டே ஒப் சேவர்' பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

30.01.86

* கடந்த நான்கு நாட்களாக மலையக தோட்டப் பகுதிகளில் தமிழர்கள் தாக்கப் படுவதனை தொடர்ந்து எதிர்ப்புக் கூறும் வகையில் ஹட்டனில் 30,000 திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

31.01.86

* நுவரெலியா மாவட்டத்தில் 35 தமிழர்களின் கடைகள் தீக்கிரையானது. இதன்போது 1 பொலீஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டும், வேறொருவர் கடத்தியும் செல்லப்பட்டுள்ளார்.

*வடபகுதியில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களுக்கு புகையிரதத்தில் எடுத்து செல்லப்பட்ட பெரும் தொகையான எரி பொருள் சுண்ணாகத்தில் வைத்து தமிழ்ப் போராளிகளால் முறியகளுடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## தமிழீழ ரத்தம்.

என்னருமைத் தமிழீழமே!
பாடுகின்றேன், ஆடுகின்றேன்
உனையெண்ணி.
பாரினிலே எமக்குதவி எவருமில்லை
பாடல்கள் நூறு புனைகின்றேன்.
புரியாத புதிராக நீயிருக்க,
புலம்பி அழுகின்றேன்,
புரண்டு அழுகின்றேன்.
புழுதி உடலையரிக்க,
உன் ஏக்கம் மனதையரிக்க,
மறு உலகேகுமுன்
மனமார உன்னுடலைத் தழுவி,
விடுதலை கிடைத்ததென்று,
விண்ணதிரக் கத்தி,
உன் மெய்மேல் என்மெய்யை
மெழுகாக உருக்கி,
விடுதலை விளக்கிற்கு
எத்தனையோ ஆயிரம் மெய்களிலே
என் மெய்யும் நெய்யாக உதவியது
என் தவமே என்றுருகும்
அந்த நாள் எந்த நாளோ?
அந்த நாள் வந்திடுமோ?
என்னுவி பிரியுமுன்
என்னருமைத் தமிழீழமே,
நீ [illegible] நீ தேசம்
- தோழர் கருணா -



## "எமக்கு அரசியல் ரீதியான அங்கீகாரம் அளியுங்கள்!"

"FRONT LINE" சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன். (மார்கழி 85)

கேள்வி:-
அடிப்படை உரிமைகள் குறித்த பேச்சு வார்த்தைகள் முன்னேற்றமடையாது தடைப்பட்டநிலை ஏற்பட்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்தும் மீறப்பட்டு வருகின்றது. இந்நிலையில் உங்கள் போராட்டத்தின் நிலைப்பாடு எதிர்கால நோக்கங்கள் என்ன?

தமிழர் குழுக்களுக்கு முன்னே இன்று இருக்கும் முக்கிய பணி போர்த்தந்திர முறைகளில் ஐக்கியம் ஏற்பட வேண்டும் என்பதே ஆகும். ஒருமுகப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. சரியான அரசியல் உணர்வின் அடிப்படையிலேயே அது ஏற்பட முடியும். தற்போது சில குழுக்கள் தாக்கிவிட்டு ஓடிமறையும் போர்முறையை கைக்கொள்வதே பெரிய தடையாக உள்ளது. இத்தகைய தாக்குதல்கள் மேலும் முன்னேற்றமடையாது உச்சக் கட்டத்தை அடைந்து தோல்வி ஏற்படும் நிலைக்கு வந்துவிட்டது.

மக்களின் ஆதரவையும் நல்லுறவையும் வளர்ப்பதற்கு ஆரம்ப காலகட்டத்தில் தாக்கிவிட்டு ஓடிமறையும் முறை பயன்பட்டது என்பது உண்மையே. நாமே முதன்முதலில் பொலிஸ் நிலையத்தை தாக்கினோம். 1981 இல் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தை தாக்கினோம். ஆனால் இன்று தமிழ மக்களின் முழு ஆதரவும் இருக்கும் வேளை இத்தகைய போராட்டமுறை காலாவதியாகிவிட்டதேயாகும். தற்போது சிங்கள மக்களுக்கு எமது போராட்டங்களை புரிய வைக்க வேண்டும்.

கேள்வி:- ஓடும்
தாக்கிவிட்டு போராட்டம் எதிர் விளைவு ஏற்படக்கூடியது என ஏன் கூறுகிறீர்கள்?

இரு தேசிய இனங்கள் வாழும் புவியியல் அமைப்பை கொண்ட பிரதேசமாக இலங்கை அமைந்துள்ளது. இங்கு 99 சதவீத ராணுவத்தினர் சிங்களவர்களாவார். இந்த போராளிகள் தாக்கி விட்டு மறைந்ததும், ராணுவம் வந்து கிராமம் கிராமமாக மக்களை கொன்று குவிக்கின்றது. வீடுகளை தீயிட்டு கொழுத்துகின்றது. இதனால் மக்கள் சொந்த பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப் படுகின்றனர் இதனால் புதிதாக குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மக்களுடனும் முரண்பாடு உருவாகி வருகின்றது.

கேள்வி:-
போராளிகளின் தாக்குதலால், சாதாரண தமிழ் மக்கள் ராணுவத்தின் தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க வேண்டி உள்ளது என்று கூறுகிறீர்களா?

ஆம், குறிப்பாக எங்கள் பாரம்பரிய பகுதிகளில் உள்ள சாதாரண மக்களுக்கு நிரந்தரமானதொரு பாதுகாப்பு அளிக்கமுடியாதவர்களாக உள்ளோம். தமிழீழத்தில் எங்கள் தளங்களை இழக்க நேரிடுகின்றது. திருகோணமலை, வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் நடந்த இத்தகைய தாக்குதல்களால் எல்லைப் பகுதிகள் பூராவும் ராணுவம் குவிக்கப்பட்டு தமிழ் மக்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. போராளிகள் இயக்கங்கள் காவல்நிலையங்களை தாக்கும் போராட்டமுறை உச்சக்கட்டத்தை அடைந்து அதற்குமேல் முன்னெடுக்கமுடியாத நிலையில் தற்போது சாதாரண மக்களை தாக்கும் நிலைக்கு வந்து விட்டனர். அத்தோடு கோவில்கள் வீடுகளில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

---திருட்டும் அதிகரித்துள்ளது, தத்துவ வரட்சித் தன்மையையே காட்டுகின்றது.

கேள்வி:-
அப்படியானால் எப்படியான ராணுவ போர்த்தந்திர முறையை கடைப்பிடிக்க வேண்டும்?
நீண்ட கால போராட்டத்திற்கு தயாரான மக்கள் படை ஒன்று தயாரிக்கப் படவேண்டும் என்பதே எமது முடிவாகும். தற்போதைய நிலையை விட போராட்ட காலத்தில் எத்தகைய தற்பாது காப்புமுறைகள் கையாளப்படவேண்டும், எவ்வாறு எதிரியை முறியடிப்பது என்பவற்றை மக்களுக்கு கற்பிக்க வேண்டும். எமது படை கிராமம் கிராமமாக சென்று மக்களுக்கு அரசியல் போதிப்பதோடு மட்டுமல்லாமல், பாதுகாப்பு கிடங்குகள் அமைக்கும் முறை, வெடிகுண்டிலிருந்து தற்காப்பு தேடும் முறை என்பவற்றை பயிற்றவேண்டும். பெய்ருட்டில் நடந்ததுபோலவே இலங்கையிலும் விமானத் தாக்குதல் ஏற்படுவதற்கு அதிக காலம் இல்லை என்பதை வெகு விரைவில் இல்லை என்பதை ஒவ்வொருவரும் உணர்வீர்கள்.

கேள்வி:-
அப்போது உங்கள் ராணுவ செயற்பாடு முற்றாக தற்பாதுகாப்பு நடவடிக்கையே!
ஆமாம். ஏனெனில் நாங்கள் முழுமையாக தயார் நிலையில் இல்லை, ஒரு பிரதேசத்தை தாக்கும் திறமை இல்லாவிடின் நாங்கள் தாக்குவதற்கு முயலக்கூடாது. ஆயினும் எம்மக்களை பாதுகாக்க எம்முடைய ராணுவம் திறமையை பயன்படுத்தவேண்டும்.

உதாரணமாக சென்ற மே மாதம் நாங்கள் கொழும்பு நிக்கரவெட்டிய காவல் நிலையம் தாக்கினோம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் ராணுவத்தை குவிப்பதை திசை திருப்புவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தொழிற் சங்கங்கள் மூலமும் மக்களை எல்லா பகுதிகளிலும் திரட்டுகின்றோம். பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் நாங்கள் திரட்டுகின்றோம். உண்மையில் அவர்களே எமது போராட்டத்தின் முன்னோடிகளாக இருப்பர். எங்கள் தமிழ் ஒலிபரப்பு மூலமாக சிங்கள முற்போக்கு சக்தியினரையும் அணி திரட்டுகின்றோம். அரசியலாளர், வகுப்புவாத பிரசாரம் செய்து தமிழர்களை எதிரிகளாக காட்டி சிங்கள மக்களை இருட்டில் வைத்துள்ளனர். பல வருடங்களாக சிங்கள தொழிலாள வர்க்கத்திற்கு உரிமைகள் கிட்டாது தொழிற் சங்கங்களில் அணிதிரள முடியாதுள்ளனர்.
ஸ்ரீலங்கா அரசாங்கம் சிங்களத் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடாது தடுப்பதற்காக தமிழர்களுக்கெதிரான வகுப்பு வாதப் போராட்டத்தில் சிங்கள மக்களை ஈடுபடுத்துகிறது. தமிழர்கள் எம்மைத் தாக்கப் போகிறார்கள், முழுநாட்டையும் அழிக்கப்போகிறார்கள், இந்தியா ஆக்கிரமிக்கப்போகிறது என்று அடிக்கடி தவறான பிரச்சாரம் செய்கின்றனர். இதனாலேயே சிங்கள பரந்துபட்ட மக்களுக்கு நாம் ஏன் போராடுகின்றோம் என்பதை தெளிவுபடுத்தி அதன்மூலம் சிங்கள மக்களையும் எம்மையும் பிரித்து ஆளுவதை தடுக்க முயலுகின்றோம். இந்தியாவின் உதவியை ஏகாதிபத்திய போராட்டத்திற்காக வேண்டுகின்றோமே அல்லாது இனப்பிரச்சினைக்காக அல்ல.

கேள்வி:-
இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள் முன்னேற்றமின்றி தடைப்படுகின்றதா? இந்தியாவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டு இருப்பதாக நம்புகின்றீர்களா?
ஜி. பார்த்தசாரதி அவர்கள் உண்மையாகவே தம்மால் இயன்றவரை முயன்றார்.----



----ஆனால் ஜெயவர்த்தனா அவரை தமிழர் என்று கூறி ஒதுக்கி விட்டார். பின்னர் பண்டாரி பேச்சுவார்த்தை நடாத்தினார். நல்லமுடிவெதுவும் ஏற்படவில்லை. ஜெயவர்த்தனா எவ்வாலோசனைகளையும் ஏற்பதற்கில்லை, அவரால் எப்பிரச்சினைகளையும் தீர்க்க முடியவில்லை. அவரது கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் பிரச்சினைகளை தீர்க்க விரும்பவில்லை. ஜெயவர்த்தனா ஒரு இனவெறியன். உதாரணமாக 1958 இல் புத்த குருமாருடன் கொழும்பிலிருந்து கண்டிக்கு பண்டா செல்வா உடன்படிக்கையை ரத்துச் செய்யவேண்டும் என்று கோரி ஊர்வலம் நடாத்தினார். இவ்வுடன்படிக்கை ஓரளவு மக்களுக்கு சுயாட்சி உரிமைகளை வழங்கக் கூடியதாக இருந்தது. அதுவும் கிழித்தெறியப்பட்டது.

கேள்வி:-
இந்நிலையில் இந்தியாவால் மேலதிகமாக என்ன செய்யமுடியும்?
யுத்த நிறுத்த உடன்படிக்கை கடைப்பிடிக்கவேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா வற்புறுத்தலாம். ஒரு இராணுவ சமநிலை ஏற்படாது இப்பிரச்சினை தீராது. என நான் பண்டாரியிடம் சென்ற தடவை கண்டபோது கூறினேன். இந்தியா ராணுவ தலையீடு செய்யவேண்டும் என கேட்கவில்லை ஆனால் இந்தியா பாலஸ்தீன அமைப்பையும், நமீபியா சுதந்திர போராட்ட அமைப்பையும் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்வதுபோல எமக்கும் ராஜ்ய அந்தஸ்து தந்து ஆயுதங்கள் தந்து உதவலாம்.

## போராளியுடன் தொடர்பு என சிங்களவர் பலர் கைது!

கொழும்பு, நவ.29—— தமிழர் பிரிவினைவாத கோஷ்டி ஒன்றுடன் தொடர்பு கொண்டிருப்பதாகக் கூறி பலர், பெரும்பாலும் சிங்களவர்கள், கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி கூறியுள்ளார்.

தமிழ் ஈழ மக்கள் விடுதலை ஸ்தாபனத்துடன் ('பிளாட்') கைதான நபர்கள் தொடர்பு கொண்டிருந்ததாக நேற்று பார்லிமெண்டில் அவர் சொன்னார்.

கைது செய்யப்பட்ட நபர்கள் சமஜவாதி ஜனதா வியபரய (எஸ்ஜேவி), ஜனதா விமுக்தி பெரமுனே நவ பிரவந்தய (ஜேவிபிஎன்பி) ஆகிய இரண்டு கோஷ்டிகளைச் சேர்ந்தவர்கள் என்று அதுலத் முதலி கூறினார்.

## இலங்கை அரசு மீது 'பிளாட்' குற்றச்சாட்டு

சென்னை, டிச. 24—— "பாலசிங்கம் வீட்டில் குண்டு வெடித்ததற்கு, இலங்கை அரசின் சூதுச் செயலே காரணம். இது தமிழ் விடுதலை இயக்கங்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த மேற்கொண்டு வரும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட இலங்கை அரசு செய்துள்ள சதித் திட்டமாகும்" என்று தமிழர் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (பிளாட்) குற்றம் சாட்டியிருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களுக்கு ஈழப் போராளிகளிடமும், இலங்கை அகதிகளிடமும் இருக்கும் அனுதாபத்தையும், ஆதரவையும் குறையச் செய்யும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்ட செயலாகும் இது என்றும் அந்த இயக்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் 'மொசாட்' உளவுப் படையினரால் பயிற்சி பெற்ற இலங்கை ஏஜெண்டுகள் தமிழ்ப் போராளிகள் இயக்கங்களுக்கிடையில் ஊடுருவி வருவதாகவும் அந்த இயக்கம் எச்சரிக்கை செய்துள்ளது.

## சிங்கள ஸ்தாபன நடவடிக்கை மீது புகார்

சென்னை, டிச. 14—— நாம் சிங்களர் ("அப்பிசிங்களயோ") என்னும் சிங்கள ஸ்தாபனம் இப்போது தமிழர், முஸ்லீம் அழிப்பு இயக்கம் என்னும் பெயரில் திட்டமிட்ட ரீதியில் செயற்பட்டு வருவதாக தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் கூறியுள்ளது.

இந்த ஸ்தாபனம் இனவெறி மிக்க ரகசிய ஸ்தாபனமாக இருந்தது என்றும், தமிழர்களையும், முஸ்லீம்களையும் மட்டுமல்லாமல் இலங்கையில் மிக மிகச் சொற்ப அளவில் இருக்கும் சிந்திக்காரர்கள், போரு போன்ற இனத்தவரையும், படுகொலை செய்யும் திட்டத்தையும் 'அப்பி சிங்களயோ' ஸ்தாபனத்தினர் வகுத்தனர் என்றும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## யுத்த களத்திற்கு போகு முன்

உன்னைப் பற்றி முழுமையாகவும், உன் எதிரியைப் பற்றி முழுமையாகவும் அறிந்து நீ யுத்த களத்திற்கு செல்வாயானால் நடக்கவிருக்கும் நூறு யுத்தங்களின் விளைவைப் பற்றி கவலைப்படாதே. நீ உன்னைப் பற்றி மட்டும் அறிவாய் எதிரியைப் பற்றித் தெரியாது என்ற நிலையில் யுத்த களத்திற்கு செல்வாயானால் நீ அடையும் ஒவ்வொரு வெற்றுக்கும் ஒரு தோல்வி நிச்சயம் உண்டு நீ உன்னைப்பற்றி அறியாமலும் எதிரியைப்பற்றி அறியாமலும் யுத்த நடவடிக்கையில் ஈடுபடுவாயானால் நீ தொடுக்கும் நூறு யுத்தத்திலும் நீ நிச்சயம் தோல்வி அடைவாய்.

"மாவோ"

# நான்காவது ஆண்டின் புரட்சிகர நினைவாக.

முதலாளி வர்க்கத்தின்
அரசியல் தலைமையினை
உடைத்தெறிந்து விட்டு
பாட்டாளி தலைமையினை
நிலைகொள்ள செய்திடவே
அயராது உழைத்திட்ட
செயல் மறவன் நீ.



தோழர் சுந்தரம்

தனிநபர்
பயங்கரவாத கொள்கையினை
உயிரிழக்கச் செய்திடவே
மக்கள் தலைமையிலே
போராட்டம் நடத்துகின்ற
கழகத்தை உருவாக்க
பணி செய்தாய் நீ.

நம்மை கலாச்சார ரீதியிலும், இராணுவ ரீதியிலும் சுற்றி வளைத்து தாக்கி அழிக்க உதவும் எதிர்புரட்சிகர இயக்கங்களின் மறைமுக விளைவானது. நமது பிரதேசத்தின்மீது சிங்கள இராணுவம் ஆக்கிரமிக்க அனுமதிப்பதாகும்.

— தோழர் சுந்தரம்
1981 ஆனி

இவன் ஏற்றி வைத்த விடுதலைச் சுடர் ஏகாதிபத்தியத்தின் ஆணிவேரைச் சுட்டுப் பொசுக்கும்வரை சுடர்ந்து கொண்டேயிருக்கும்.


# T-E-I-B

24 மணிநேரசேவை
24 HOURS SERVICE

FOR RECORDED MESSAGES, PLEASE RING
THAMIL - 01 470 6270 === ENGLISH - 01 552 5970.


Published by: Thamileelam Information Bureau, BM Box 1916, London WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்